**Avinashilingam Institute for Home Science and Higher Education for Women**
**Coimbatore – 641 043**

**Master's Degree Examination – November 2017**

**I Semester**

**Class : I PG** | **Time : 3 Hours**
**Major : Tamil** | **Max. Marks : 100**

**17MTMC04 பண்டைய இலக்கியம்** (பெண்பாற் புலவர்கள்)

**பகுதி - அ** **10 x ½ = 05**
**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து வட்டமிடுக.**

1. புறநானூற்றின் அடி வரையறை யாது?
   அ. 4 – 40 ஆ. 2 – 20
   இ. 1 – 10 ஈ. 3 – 30

2. எண்தேர் செய்யும் தச்சன் திங்கள் வலித்த சக்கரத்திற்கு ஒப்பானவன் யார்?
   அ. நெடுஞ்செழியன் ஆ. அதியமான்
   இ. நலங்கிள்ளி ஈ. கரிகாலன்

3. அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின் எதனை உடையேம்?
   அ. தமக்கை ஆ. நுந்தை
   இ. நங்கை ஈ. எந்தை

4. சான்றோன் ஆக்குதல் யாருக்குத் கடன்?
   அ. தந்தை ஆ. தாய்
   இ. ஆசான் ஈ. வேந்தர்

5. கல்லாக் கடுவன் - 'கடுவன் பொருள் தருக.
   அ. மயில் ஆ. புலி
   இ. குரங்கு ஈ. புறா

6. அகநானூற்றைத் தொகுத்தவர் யார்?
   அ. உக்கிரப் பெருவழுதி ஆ. பூரிக்கோ
   இ. கூடலூர்க் கிழார் ஈ. உருத்திரசன்மனார்

7. உரையாசிரியர்களால் பெரிதும் மேற்கோள் காட்டப்பட்ட நூல்?
   அ. நற்றிணை ஆ. குறுந்தொகை
   இ. கலித்தொகை ஈ. ஐங்குறுநூறு

8. விருந்துவரக் கரைந்தது எது?
   அ. காக்கை ஆ. கொக்கு
   இ. குயில் ஈ. மயில்

9. பொருநராற்றுப்படையின் ஆசிரியர் யார்?
   அ. நன்னாகையார் ஆ. வெள்ளிவீதியார்
   இ. ஔவையார் ஈ. முடத்தமாக் கண்ணியார்

10. வெண்ணிப் போரில் வெற்றி பெற்றவர் யார்?
    அ. நல்லியக்கோடன் ஆ. கரிகாலன்
    இ. நல்லுருத்திரன் ஈ. பிரகதத்தன்

## பகுதி - ஆ  5 x 4 = 20

**கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.**

11.அ. மாரிவெண்கோ, பெருவழுதி, பெருநற்கிள்ளி ஆகியோர் ஒருங்கு இருக்க ஔவையார் பாடியது எங்ஙனம்?

(அல்லது)

11.ஆ. அதியமானின் மகனான பொகுட்டு எழனியை ஔவையார் பாடிய திறம் யாது?

12.அ. நக்கண்ணையார் பாடற் சிறப்பைப் புறநானூற்று வழி எழுதுக.

(அல்லது)

12.ஆ. ஏறைக்கோனை இளவெயினார் பாடியது எங்ஙனம்?

13.அ. கழார்க் கீரனெயிற்றியார் தம் நற்றினைக் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

13.ஆ. தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்வதுபோலத் தலைவி சொல்லியதை நக்கனையார் பாடல் வழி எழுதுக.

14.அ. அள்ளூர் நன்முல்லையார், நெடும்பல்லியத்தைப் பாடிய குறுந்தொகைப் பாடல்களை விளக்குக.

(அல்லது)

14.ஆ. நன்னாகையார், காக்கைப்பாடினியார் பாடல்கள் வழி அறியலாகும் குறுந்தொகை கருத்துக்களை உணர்த்துக.

15.அ. பாடினியின் கேசாதிபாத வருணனையை எடுத்தியம்புக.

(அல்லது)

15.ஆ. கரிகாலன் உணவு கொடுத்து ஓம்பிய முறையினைக் கூறுக.

## பகுதி - இ  5x12 = 60

**பின்வரும்வினாக்களுக்கு 800 சொற்களில் விடைதருக.**

16.அ. புறநானூற்றில் அறியலாகும் மன்னர்களை ஔவையார் பாடல்கொண்டு விளக்குக.

(அல்லது)

16.ஆ. ஔவையார் பாடல்கள் வழி அறியலாகும் அதியமான் பெருமைகளை விளக்குக.

17.அ. மாறோக்கத்து நப்பசலையார் பாடல்சிறப்பைப் புறநானூற்று வாயிலாக புலப்படுத்துக.

(அல்லது)

17.ஆ. பேய்மகள் இளவெயினார், பொன்முடியார் பாடிய புறநானூற்றுக் கருத்துக்களைக் கட்டுரைக்க.

18.அ. தலைவி கூற்றுகளாக இடம்பெறும் நற்றிணைப் பாடற் கருத்துக்களை விவரிக்க.

(அல்லது)

18.ஆ. நக்கன்னையாரின் பாடல்களின் வழி சங்ககாலத் தமிழரின் மாண்புகளைப் புலப்படுத்துக.

19.அ. அகமாந்தர் இயல்பாக ஔவையார் கூறுவதைக் குறுந்தொகை வழி சான்றுடன் தருக.

(அல்லது)

19.ஆ. வெள்ளிவீதியார் கூறும் குறுந்தொகையின் அகமாந்தர் கூற்றுக்களை விளக்குக.

20.அ. சோழநாட்டின் வளமும் வனப்பும் பற்றிப் பொருநராற்றுப்படை வழி எழுதுக.

(அல்லது)

20.ஆ. கரிகாலனது வெண்ணிப்போர் வெற்றியும் கொடைச் சிறப்பும் குறித்துப் புலப்படுத்துக.

*****************